**செய்தி வெளியீடு எண்: 55** **நாள்: 23.01.2013**

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணைப் படி மாநில அளவில் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் இன்று (23.1.2013) முற்பகல் எழிலகம் கூட்ட அரங்கில் நடைபெற்றது. தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளில் 2013 ஆம் ஆண்டிற்கான உள்தாள்கள் இணைக்கும் பணி மற்றும் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்.

- தமிழக மக்கள் அனைவரும் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும் வகையில் நியாயவிலைக் கடைகளில் அரிசி பெறும் 1 கோடியே 84 லட்சம் அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு 160 ரூபாய் மதிப்பிலான சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு ஒன்றினை வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு 13.1.2013 முடிய 1,78,27,361 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது. இப்பணியை சிறப்புடன் நிறைவேற்றிய அலுவலர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாகவும் , இடர்பாடு பங்கீட்டு முறையின் படி தமிழகத்திற்கு தர வேண்டிய காவேரி நீரினை கர்நாடகம் திறந்து விட மறுத்ததாலும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள காவேரி டெல்டா பகுதியில் வறட்சி நிலைமையை ஆய்வு செய்யும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஆணையின் படி அமைக்கப்பட்டுள்ள மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையிலான உயர்மட்ட குழு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள காவேரி டெல்டா பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வறட்சி நிலைமையை ஆய்வு செய்வதுடன் பொது மக்களின் குறைகளையும் கேட்டறிந்து வருகிறது. இப் பகுதிகளின் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் முழு வீச்சில் முனைப்புடன் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளில் 2013 ஆம் ஆண்டிற்கான உள்தாள் இணைக்கும் பணியில் இது வரை 1,30,56,567 குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டைகளில் உள்தாள்களை இணைத்து பெற்றுச் சென்றுள்ளனர். தொடர்ந்து இப்பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் உள்தாள்கள் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகளுக்கு உள்தாள்கள் இணைத்து பொருள்கள் வழங்க வேண்டும் . நியாயவிலைக் கடைகளில் கூட்டமில்லாத நாட்களில் வேறொரு தேதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப

அட்டைதாரர், கடைக்கு நேரில் வந்திருந்து புதுப்பிக்கும் படி கோரினால் அவர்களை திருப்பி அனுப்பாமல் குடும்ப அட்டையில் உள்தாள் இணைத்து வழங்க வேண்டும்.

- நியாயவிலைக் கடைகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு வேலை நேரத்தில் திறந்து செயல்படுவது, தரமான அத்தியாவசியப் பொருள்கள் தேவையான அளவிற்கு நியாயவிலைக் கடைகளுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்பட்டு இருப்பு வைக்கப்படுவது குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான எடை மற்றும் அளவில் வழங்குவது தொடர்ந்து உறுதி செய்யப்பட வேண்டும் .
- மானியத்துடன் கூடிய சலுகை விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை கடத்தி கள்ளச்சந்தையில் விற்க முயற்சி செய்ததற்காக கடந்த ஓராண்டு காலத்தில் 57,944 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசியும் 1,87,288 லிட்டர் மண்ணெண்ணெயும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன. 4910 நபர்கள் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டில் மட்டும் அதிக அளவாக 2246 வாகனங்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன. கள்ளச்சந்தை தடுப்பு சட்டத்தின் கீழ் 196 நபர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக அளிக்கப்படும் தகவல்கள் மற்றும் புழக்கத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகள் தொடர்பாக தகவல் அளிப்பவர்களுக்கு ரூ. 1000 வரை சன்மானம் வழங்கப்படுகிறது.
- பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக குடும்ப அட்டைதாரர்கள் ஆணையாளர் அலுவலகத்தில் செயல்படும் மாநில நுகர்வோர் சேவை மையத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். அதன் மீது உடன் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. 044-28583322<br>2. 044-28583222<br>3. 72 9999 8002<br>4. 86 8001 8002 | 5. 72 0001 8001<br>6. 72 9900 8002<br>7. 86 8002 8003<br>8. 72 0004 8002 |

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், நுகர்வோர் உரிமைகள், குறைதீர் வழிமுறைகள் குறித்து வட்டாரத்திற்கு 30 உறுப்பினர்கள் வீதம் 260 வட்டாரங்களில் 7800 மகளிர் குழுக்கள் / பஞ்சாயத்தளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு பயிற்சிஅளித்து 900 கிராமங்களில் பொதுமக்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்கள் ரூ 1 கோடியே 31 இலட்சம் செலவில் நடத்திட திட்டமிடப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- நுகர்வோர் சேவை மையம் குறித்த தகவல்களை விளம்பரப்படுத்தும் விதமாக கிராமப் பஞ்சாயத்து மற்றும் மலைப்பகுதிகளில் செயல்பட்டு வரும் 23 ஆயிரத்து 493 நியாயவிலை

அங்காடிகளில் ரூ. 48 இலட்சம் செலவில் நிரந்தர தகவல் பலகைகள் அமைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மாணவர்களுக்கும் அவர்கள் மூலமாக மற்றையோருக்கும் நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 500 கல்வி நிறுவனங்களில் புதிதாக நுகர்வோர் மன்றங்கள் ரூ 12 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நுகர்வோர் பிரச்சனைகளுக்கு மாற்று அடிப்படையில் தீர்வு காணும் வகையில் மாநில நுகர்வோர் உதவி மையம் நிறுவப்பட்டு அதன் வாயிலாக 2,62,487 அழைப்பாளர்கள் பயன் பெற்றுள்ளன . செல்லிடபேசியில் 41142 குறுஞ்செய்தி அழைப்புகள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நியாயவிலைக் கடையின் மாதாந்திர அத்தியாவசியப் பொருள்களின் ஒதுக்கீட்டை கீழ்க்கண்ட இணை தளம் மூலம் தெரிந்து கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. New system: open to all
  http://www.consumer.tn.gov.in/
  http://cscp.tn.nic.in/allotment_ver2/rep_allotment_shopwise.jsp

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1. திருமதி. எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.,
   அரசு செயலாளர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   சென்னை 9
2. திரு. பெ.மு. பஷீர் அஹமது, இ.ஆ.ப.,
   ஆணையாளர்,
   உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   சென்னை 5.
3. திரு.கே. இராதாகிருஷ்ணன்,இ.கா.ப.,
   கூடுதல் காவல் துறை தலைவர்,
   குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை 35
4. திரு.எம். சந்திரசேகரன்,இ.ஆ.ப.,
   நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
   சென்னை 10
5. துணை ஆணையாளர் , சென்னை (நகரம்) வடக்கு/தெற்கு,
   சென்னை 5
6. அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**